بسم الله الرحمن الرحيم

# இஜ்மாஉஸ் ஸஹாபா இஸ்லாத்தின் மூலாதாரமாகுமா ?

இஸ்லாம் என்பது அல்லாஹ்வால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரே மார்க்கமாகும். அதன் போதனைகள், வழிகாட்டுதல்கள் யாவும் வானத்திலிருந்து அல்லாஹ்வால் அருளப்பட்ட வஹியின் அடிப்படையில் அமையப் பெற்றவைகளாகும்.

எனினும் இத்தூய இஸ்லாத்தின் பெயரால் இன்று பல பிரிவுகளும் பிளவுகளும் ஏற்பட்டிருப்பதை அனைவரும் அறிவர். சாந்தி, சமாதானம் என்ற நாமங்களைக் கொண்ட மார்க்கம் இன்று சண்டை, சச்சரவு, பயங்கரவாதம் போன்றவற்றைத் தோற்றுவிக்கும் மார்க்கம் எனக் கூறப்படுமளவுக்கு நிலைமை மாறிப் போயிருக்கின்றது.

இதற்கான பிரதான காரணம் என்னவெனில் இந்த சமுதாயம் அல்லாஹ்வின் வஹியை (அல்குர்ஆன்,அல்ஹதீஸை) மட்டும் பின்பற்றி ஒரே இமாமின் கீழ் ஒரே கூட்டமைப்பாக ஜமாஅதுல் முஸ்லிமீன் என்ற அடிப்படையில் ஒன்றுபடாமல் இஜ்மாஉ, கியாஸ், இஜ்மாஉஸ் ஸஹாபா (ஸஹாபாக்களின்சொல், செயல், அங்கிகாரம்), பஹ்முஸ் ஸஹாபா (ஸஹாபாக்களின் விளக்கம்), மவ்கூப், ஹுக்மன் மர்பூ.:., தவாதுருல் அமல் போன்றவற்றைப் பின்பற்றி பல பிரிவுகளாகப் பிரிந்து காணப்படுவதேயாகும்.

**நீங்கள் அனைவரும் அல்லாஹ்வின் கயிற்றை (வஹியை) பலமாகப் பற்றிப்பிடித்து ஒரு கூட்டமாக ஆகிவிடுங்கள்; அதில் பிரிந்துவிடாதீர்கள். (அல் குர்ஆன் – 3 : 103)**

அல்குர்ஆன் , அல் ஹதீஸை மட்டும் மூலாதாரமாகப் பின்பற்றாமல், வேறு விடயங்க ளைப் பின்பற்றுவதன் காரணமாகவே தங்களை முஸ்லிம்கள் என அழைத்துக் கொள்ளும் இந்த சமூகத்தில் மார்க்கத்தின் பெயரால் பல பித்அத்கள் தோற்றம் பெற்றிருப்பதைக் காணலாம்.

**இஜ்மாஉஸ் ஸஹாபாவை மூலாதாரமாகப் பின்பற்றுவோரிடம் காணப்படும் வஹி அல்லாத பித்அத்களில் சில வருமாறு :**

1. **தொழுகையில் (ஸப்) வரிசைகளைச் சரிசெய்ய இமாம் (அஸா) தடியைப் பயன்படுத்தல்.**
2. **பெண்களுக்கு தொழுகை நடாத்தும் பெண் அவர்களின் நடுவில் நின்று இமாமத் செய்தல்.**
3. **பெருநாள் தினங்களில் தகப்பலழ்ழாஹு மின்னாவமின்கும் என்று கூறுதல்.**
4. **பெருநாள் தினங்களில் கடமையான குளிப்புக் குளித்தல்.**
5. **மரணத் தருவாயில் இருப்பவருக்காக யாசின் ஓதுதல்.**
6. **இப்னு உமர் ﷺ அவர்கள் தாடியை ஒரு பிடி பிடித்து வெட்டினார்கள் என்பதற்காக தாடி வெட்டுதல்.**
7. **மரணித்தவரின் வீட்டில் சமைக்கக் கூடாது என்பது.**
8. **ஜும்ஆ தினத்தில் இரண்டு அதான் கூறுதல்.**
9. **சுபஹில் குனூத் ஓதுதல்.**
10. **ரமழானில் தராவீஹ் 23 ரக்கஅத் தொழுதல்.**
11. **பாவமான காரியங்களில் அமீருக்குக் கட்டுப்பட வேண்டும் என்று கூறுதல்.**
12. **தொழும்போது பள்ளியினுள் சுத்ரா (தடுப்பு) தேவையில்லை என்று கூறுதல்.**
13. **தஹிய்யதுல் மஸ்ஜித் ஒரு முறை தொழுதால் போதும் என்று கூறுதல்.**
14. **ஊருக்கொரு பிறை என்ற கோட்பாடு.**
15. **ஷிர்க் செய்பவரை முஷ்ரிக் எனக் கூறமாட்டோம்; ஆனால் அந்தச் செயலை ஷிர்க் என்போம். குப்ர் செய்பவரை காபிர் என்று கூறமாட்டோம்; ஆனால் அந்தச் செயலை குப்ர் என்போம். தக்லீத் செய்பவரை முகல்லித் டின்று கூறமாட்டோம்; ஆனால் அந்தச் செயலை தக்லீத் என்போம்.**

மேற்படி விடயங்களுக்கு அல் குர்ஆனிலோ ஸுன்னாவிலோ தெளிவான ஆதாரங்கள் காணப்படாத நிலையில் இஜ்மாஉஸ் ஸஹாபா (ஸஹாபாக்களின் சொல், செயல், அங்கீகாரம்) மூலமே ஆதாரங்களை முன்வைக்கின்றனர்.

ஆனால் ஒருவிடயத்தை நாம் மார்க்கமாகச் செய்வதாக இருந்தால் அதனை அல்லாஹ் அல்குர்ஆனின் மூலமோ அல்லது அவனது தூதர் மூலமோ அதனை மார்க்கமாக்கியிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அது பித்அத்தாக அமைந்துவிடும். பித்அத் செய்பவன் இணைவைப்பவனாவான். பித்அத்களில் ஒன்றைச் செய்தாலும் சரி அல்லது பலதைச் செய்தாலும் அது இணைவைப்பாகவே அமைந்து விடுகின்றது. மேலும் அவை அல்லாஹ்விடம் ஏற்கப்படவும் மாட்டாது. அத்தகையோர் நிரந்தரமாக நரகம் நுழைவர்.

**அல்லாஹ் அனுமதிக்காததை மார்க்கமாக்கி வைக்கக் கூடிய இணை தெய்வங்கள் அவர்களுக்கு இருக்கின்றனவா? ( அல் குர்ஆன் – 42 : 21 )**

**நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:**

**நம்முடைய மார்க்கத்தில் இல்லாத ஒரு செயலை யார் புதிதாகச் செய்கின்றாரோ அது (அல்லாஹ்விடம்) நிராகரிக்கப்பட்டதாகும். ( ஸஹீஹ் முஸ்லிம் – 3541 )**

இஸ்லாமிய மார்க்கத்தின் அனைத்து சட்டதிட்டங்களையும் அல்லாஹ் தனது தூதர் ﷺ அவர்கள் உயிருடன் இருக்கும்போதே பூரணப்படுத்திவிட்டான்.

**இன்றையதினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தைப் பரிபூரணமாக்கிவிட்டேன்.**
**(அல் குர்ஆன்– 5 : 03 )**

மார்க்கம் பூர்த்தியாக்கப்பட்டிருக்கும் நிலையில் யாரெல்லாம் அல்குர்ஆன், ஸுன்னா வுடன் இஜ்மாஉஸ்ஸஹாபா போன்ற மூலாதாரங்களைப் பின்பற்றுகின்றார்களோ அவர்கள் மேற்படி அல்லாஹ்வின் வசனத்தை நிராகரிப்பவர்களே. மேலும் வஹியில் குறை காண்பவர்கள், ''வஹியில் எல்லாவிடயங்களுக்கும் தீர்வு இல்லை; நவீன பிரச்சினைகளுக்கு வஹியில் தீர்வு இல்லை போன்ற சிந்தனையுடையவர்களேயாவர். அத்தகையோர் வஹியுடன் சேர்த்து இவ்வாறான மூலாதாரங்களைப் பின்பற்றுவதன் மூலம் அல்லாஹ்வின் வஹியை ஏற்க மறுக்கின்ற ஏனைய மதத்தவர்களைப் போலாகி விடுகின்றனர்.

மேற்படி மூலாதாரங்களைப் பின்பற்றி பித்அத்களைச் செய்வோர் நாங்கள் மார்க்கத்தில் புதிதாக எதனையும் தோற்றுவிக்கவில்லை மாறாக நபித்தோழர்களையே பின்பற்றுகின்றோம் என்கின்றனர். ஆனால் வஹியை மட்டுமே பின்பற்றுமாறும் ஏனைய மனித சிந்தனைகளைப் பின்பற்ற வேண்டாம் என்றும் அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் கட்டளை இடுகின்றனர். ''ஸஹாபாக்களின் சொல், செயல், இஜ்மாக்களைப் பின்பற்றிக் கொண்டு எங்களது மூலாதாரம் இரண்டு மாத்திரம் என்று ஏன் கூறுகின்றீர் கள்?'' என்று கேட்டால், ''ஸஹாபாக்களின் சொல், செயல், இஜ்மா∴ போன்றவைகள் வஹியினுள் அடங்கிவிடுகின்றது'' என்று கூறுகின்றனர்.

**(மனிதர்களே!) உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு இறக்கப்பட்டதையே பின்பற்றுங்கள். (அவனையன்றி) வேறெவரையும் பாதுகாவலர்களாக்கிக் கொண்டு அவர்களைப் பின்பற்றா தீர்கள். ( அல் குர்ஆன்–7 : 03 )**

**மேலும் நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:**
**நான் உங்கள் மத்தியில் இரண்டை விட்டுச் செல்கின்றேன். அவ்விரண்டையும் பின்பற்றும் காலமெல்லாம் நீங்கள் வழிகேட்டில் செல்லவே மாட்டீர்கள். அவை அல்yhஹ்வின் வேதமும் (அல் குர்ஆன்) எனது வழி முறையும் (ஸுன்னா) ஆகும்.**
**(ஸஹீஹ் முஸ்லிம் – 1218 , முஅத்தா மாலிக் – 3338, 678)**

அல்லாஹ் பாதுகாப்பு வழங்குவதாக உத்தரவாதம் வழங்கியது அல்குர்ஆன், அல்ஹதீஸ் ஆகிய இரண்டுக்கு மட்டுமேயாகும். மற்ற மனிதகருத்துகளுக்கு அல்ல.

**நிச்சயமாக நாம்தான் இவ்வேதத்தை (வஹியை) ( உம்மீது ) இறக்கிவைத்தோம். நிச்சயமாக அதன் பாதுகாவலனாகவும் நாமே இருக்கின்றோம். (அல் குர்ஆன் –15 : 09 )**

எனவே இஜ்மாஉஸ்ஸஹாபா அல்லது ஹுக்மன் மர்பூஃ, பஹ்முஸ் ஸஹாபா போன்ற மூலாதாரங்களைப் பின்பற்றுவோர் அவ்வாறான பித்அத்களை நபித்தோழர்களே தமக்கு மார்க்கமாக்கித் தந்ததாகக் கூறுகின்றனர். ஆனால் நபித்தோழர்கள் எந்த சந்தர்ப்பத்திலும் வஹி அல்லாததைப் பின்பற்றவுமில்லை; வஹியல்லாத ஏனைய மனித சிந்தனைகளைப் பின்பற்றுமாறு பிறருக்கு ஏவுவதுமில்லை. ஏன் வஹியை விட்டு விட்டு தம்மைப் பின்பற்றுமாறு கூட அவர்கள் கூறவில்லை என்பதை பின்வரும் செய்தி தெளிவுபடுத்துகின்றது.

**இப்னு உமர் ﷺ அவர்களிடம் ஒருமனிதர் வந்து நான் ஹஜ்ஜுக்காக இஹ்ராம் கட்டியவுடன் இறையில்லம் கஃபாவைச் சுற்றிவரலாமா? என்று கேட்டார். அதற்கு இப்னு உமர் ﷺ அவர்கள் அவ்வாறு செய்வதற்கு உமக்கு என்ன தடை?என்று கேட்டார்கள். அதற்கு அம்மனிதர் இன்ன மனிதரின் புதல்வர் அவ்வாறு தவாப் செய்வதை வெறுப்பதை நான் கண்டேன்......என்றதும் அதற்கு இப்னு உமர் ﷺ அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் ஹஜ்ஜுக்காக இஹ்ராம் கட்டியவுடன் இறையில்லம் கஃபாவைச் சுற்றி வந்ததையும் ஸஃபா மற்றும் மர்வாக்கிடையில் (சயீ) ஓடி வந்ததையும் நாங்கள் கண்டோம். என்று கூறிவிட்டு,**

**“நீர் உண்மையாளராய் இருந்தால் அல்லாஹ்வின் வழி முறையையும் அவன் தூதரின் வழி முறையையும் பின்பற்றுவதே இன்ன இன்ன மனிதர்களின் வழிமுறையை நீர் பின்பற்றுவதை விட மிகவும் தகுதியானதாகும்” என்று கூறினார்கள். ( ஸஹீஹ் முஸ்லிம்: 2375 )**

அல்குர்ஆன் அல் ஹதீஸை மட்டும்தான் பின்பற்ற வேண்டும். மற்ற மூலாதாரங்கள் எதனையும் பின்பற்றக் கூடாது. நபி ﷺ அவர்களும் அருமை ஸஹாபாக்களும் அவ்விரண்டையும்தான் பின்பற்றினார்கள். அனைத்து ஸஹாபாக்களும் வஹியின் மூலம் மார்க்கமாக்கப்படாத ஒன்றை தமது இஜ்மாவின் மூலம் மார்க்கமாக்கி அல்லாஹ்வின் மார்க்கத்தில் பித்அத் செய்திருக்க மாட்டார்கள் போன்ற விடயங்களை நாம் முன்வைக்கும் போது இஜ்மாஉஸ்ஸஹாபாவை மூலாதாரமாகப் பின்பற்றுவோர் அதற்காக பின்வரும் வசனத்தினை ஆதாரமாக முன் வைக்கின்றனர்.

**இன்னும் முஹாஜிர்களிலும், அன்ஸாரிகளிலும், முதலாவதாக (ஈமான் கொள்வதில்) முந்திக் கொண்டவர்களும் அவர்களை நல்ல முறையில் பின் தொடர்ந்தவர்களும் இருக்கின்றார்களே அவர்களை அல்லாஹ் பொருந்திக் கொண்டான்...... ( அல் குர்ஆன் – 9 : 100 )**

மேற்படி வசனத்தில் ‘وَالَّذِينَ اتَّبَعُوهُمْ بِإِحْسَـــانٍ’ என்ற வாசகம் காணப்படுகின்றது. அதன் பொருள்: “**அவர்களை (எல்லா நற்கருமங்களிலும்) நல்ல முறையில் பின் தொடர்ந்தவர்களும்**” என்பதாகும் . இதனை வைத்துக் கேட்கின்றார்கள் ஸஹாபாக்களைப் பின்பற்றினால் அல்லாஹ்வின் பொருத்தம், சுவனம் உண்டு என்றெல்லாம் அல் குர்ஆன் கூறும் போது நீங்கள் மட்டும் எப்படி பித்அத் என்று கூறுவீர்கள்? என எம்மிடம் கேட்கின்றனர்.

ஆனால் அந்த வசனத்தில் ‘وَالَّـــذِيـــنَ اتَّـــبَـــعُـــوهُـــمْ’ அதாவது **யார் அவர்களைப் பின்பற்றினார்களோ**......என்று மட்டும் வந்திருந்தால் அவர்களின் வாதத்தினை ஓர் இரு நிமிடங்களுக்காவது சரி காணலாம். ஆனால் அங்கே‘وَالَّذِينَ اتَّبَعُوهُمْ بِإِحْسَـــان’ என்றே இடம் பெற்றுள்ளது.

**‘அவர்களை (எல்லா நற்கருமங்களிலும்) நல்ல முறையில் பின் தொடர்ந்தவர்களும்”** என்றே இடம் பெற்றுள்ளது. ஆகவே “**நல்லமுறை, அழகிய வழிகாட்டுதல், சிறந்தமுறை**” என்பதெல்லாம் (அல்குர்ஆன், அல்ஹதீஸ்) வஹியிலிருந்து கிடைக்கப் பெறும் வழிகாட்டுதல்கள் மட்டுமேயாகும்.

**إِنَّ أَحْسَنَ الحَدِيثِ كِتَابُ اللَّهِ، وَأَحْسَنَ الهَدْيِ هَدْيُ مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ** ( صحيح البخاريَ : 6098 )

**நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:**

**நிச்சயமாக செய்திகளில் மிகச் சிறந்தது அல்லாஹ்வின் வேதமாகும். மேலும் வழி காட்டுதல்களில் மிகச் சிறந்தது அல்லாஹ்வின் தூதர் முஹம்மது ﷺ அவர்களின் வழிகாட்டுதலேயாகும். (ஸஹீஹுல் புஹாரி– 6098 )**

எனவே வஹியின் அடிப்படையில் யார் செயற்பட்டாலும் அவர்களைப் பின்பற்றுவதில் எவ்விதத் தவறும் இல்லை. ஆனால் அல் குர்ஆன் ஸுன்னாவின் மூலம் மார்க்கமாக்கப்படாத ஒன்றை ஸஹாபாக்களின் பெயரால் அல்லது பின் வந்த இமாம்களின் பெயரால் மார்க்கமாக்குவது பித்அத்தாகும்.

ஆகவே தங்களை முஸ்லிம்கள், முஸ்லிம்களின் கூட்டமைப்பு என்றெல்லாம் அழைத்துக் கொண்டு வஹி அல்லாதவற்றை மூலாதாரங்களாகப் பின்பற்றி தாமும் வழிகெட்டு மற்றவர்களையும் வழி கெடுக்கும் அத்தனை பிரிவுகளை விட்டும், மேலும் நாங்கள் பித்அத் செய்யவில்லை; எங்கள் தலைவர்கள்தான் பித்அத் செய்கின்றார்கள் என்று கதை சொல்லும் வழிகெட்ட பிரிவுகளையும் விட்டு ஒதுங்கி, சுவனம் செல்லும் என்று அல்லாஹ்வின் தூதரினால் முன்னறிவிப்புச் செய்யப்பட்ட வஹியை மட்டும் பின்பற்றுகின்ற அல் ஜமாஅத் எனப்படும் ஜமாஅதுல் முஸ்லிமீனுடன் இணைந்து கொள்ளுமாறு அன்பாய் அழைக்கின்றோம்.

**நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:**

**நீ ஜமாஅதுல் முஸ்லிமீனையும் அவர்களின் இமாமையும் பற்றிப்பிடித்துக் கொள்...... பிரிவுகள் அனைத்தையும் விட்டும் ஒதுங்கிவிடு. (ஸஹீஹுல் புஹாரி– 7084 ஸஹீஹ் முஸ்லிம் – 1847)**

**اتَّبِعُوا مَا أُنْزِلَ إِلَيْكُمْ مِنْ رَبِّكُمْ وَلَا تَتَّبِعُوا مِنْ دُونِهِ أَوْلِيَاءَ قَلِيلًا مَا تَذَكَّرُونَ** ( سورة آلأعراف : 03)

**(மனிதர்களே!) உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு இறக்கப்பட்டதையே பின்பற்றுங்கள். (அவனையன்றி) வேறெவரையும் பாதுகாவலர்களாக்கிக் கொண்டு அவர்களைப் பின்பற்றா தீர்கள். நீங்கள் குறைவாக சிந்திக்கக் கூடியோராய் இருக்கின்றீர்கள்.** ( அல் குர்ஆன்-7 : 03 ) .


**வெளியீடு:**

**ஜும்ஆப் பள்ளி**

**ஜமாஅதுல் முஸ்லிமீன்,**

**புல்மோட்டை – 03**

**தலைமையகம் :**

**மஸ்ஜிதுல் முஸ்லிமீன், ஜமாஅதுல் முஸ்லிமீன்,**

**கற்பிட்டி வீதி, ஏத்தாளை, புத்தளம்,**

**இலங்கை.**



**Website: www.jamaathulmuslimeen.com**
**Twitter: f thelivu**
**Phone: 0712597123/0773729465/0715684645/0715602662**